Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ ஆனி௴ ௨௫௳ (9-7-39) { இல. 36

கல்வி வாரம்

வித்தியாபகுதியார் சென்றவருடம் கல்வி வாரத்தை விமரிசையாக நடத்தினர். இவ்வருடமும் அவ்வாரம் இம்மாசக் கடைசியில் நடாத்தப்படவேண்டுமென எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் சுற்றுநிருபம் விட்டிருக்கின்றனர். வித்தியாவாரக் காலத்தில் மாம்பழக் காட்சி, ஓவியக் காட்சி என்ற இருகாட்சிகளும் நடைபெறுமெனவும் அவைகளையும் பார்ப்பது மாணவர்களுக்கு அதிக அநுகூலமாகவிருக்கும் எனவும் சுற்றுநிருபம் விடப்பட்டிருக்கிறது.

வித்தியாவாரம் இலங்கையில் மாத்திரமன்றி உலகத்தின் பலபாகங்களிலும் நடாத்தப்பட்டுமிருகின்றது. வித்தியாவாரத்தின் நோக்கம் யாது? வித்தியாசாலைக் கல்வியோடமையாது வித்தியாசாலைக்குப் புறம்பேயுங் கற்கவேண்டிய கல்வி அதிகமிருக்கின்றது. அக் கல்வியில் மாணவர்களுக்கு விருப்பத்தை உண்டுபண்ணுவதே வித்தியாவாரத்தின் நோக்கமாகும். வாழ்க்கைக்குப் புத்தகக் கல்வி மாத்திரம் பயன்படாது. லௌகிகக் கல்வி ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டும்.

சிலகாலங்களுக்கு முன்னர் லௌகிகக் கல்வியினவசியம் தெரியாது புத்தகக் கல்வியைப் பெரிதும் ஊட்டிவந்தனர். புத்தகக் கல்வியினால் விளைந்த பிரயோசனம் மிகக் குறைவென்பதை யுணர்ந்த கல்வி நிபுணர்கள் பிள்ளைகள் உலக அறிவைப் பெற வேண்டுமென எண்ணி அதற்குரிய வழிவகைகளையுங் கூறியுள்ளனர்.

வித்தியாவாரம் யாரால் நடாத்தப்பட வேண்டும் என்பது ஆலோசிக்கத்தக்கது. சென்னை முதலியவிடங்களில் வித்தியாவாரம் உபாத்தியாயர் சங்கங்களினால் நடாத்தப்பட்டுவருகின்றது. உபாத்தியாயரும் பெற்றாரும் வித்தியாவார நிகழ்ச்சிகளுக்குரிய அதிகாரிகளாவர். வித்தியாவாரத்தில் ஏற்படும் செலவு பெரும்பாலும் ஆசிரியர்களாற் பொறுக்கப்படுகின்றது. ஆகையால் அவ்வாரம் ஆசிரியர்களால் நடாத்தப்பட வேண்டும். வித்தியாபகுதியார் ஆசிரிய சங்கங்களைத் தூண்டி அவைகள் மூலம் வித்தியாவார நடவடிக்கைகள் யாவற்றையும் செய்விப்பது முறையாகும். சுற்றுநிருபங்களின் மூலமாக ஆசிரியரைக்கொண்டு வித்தியாவாரம் நடாத்துவித்து அவ்வாரத்தின் நோக்கங்களைப் பூரணமாகப் பெறுதல் முடியாத காரியமாகும்.

வித்தியாபகுதியார் வித்தியா வாரத்தை ஏன் நடாத்த முன்வந்திருக்கின்றனர்? ஆசிரிய சங்கங்கள் இவ்வித கல்வி முயற்சியில் தலையிடாமலிருப்பதினாலன்றோ. ஆசிரியர்கள் தமது கடமைகளை நன்கு உணர வேண்டும். இப்போது கல்வி கற்கும் மாணவர்கள் வருங்காலத்திற் தேசத்தலைவர்களாவார்கள். ஆகையால் அவர்களுக்கு ஏற்ற கல்வி கற்பிப்பது பொருத்தமாகும். ஆகையால் வித்தியாவாரம் ஆசிரியர்களால் கையாளப்பட வேண்டியதொன்றாகும்.

வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்பகலத் தண்ணருளாய், வந்துபொழி கின்ற மழைகாண்ப தெந்நாளோ.

இலக்ஷ்மி எங்கிருப்பாள்?

[அ. ஆ.]

(முற்றொடர்)

"ஆனல் குடியானவன் வீட்டில் மட்டும் அவனுடைய மனைவி என்றும் தன் வழக்கம்போல் அதிகாலையில் எழுந்து வீட்டைத் திரு அலகிட்டு, மெழுக்குமிட்டு, குளித்து விட்டு, தூண்டா விளக்கிற்குச் சந்தனம் குங்குமம், பூ இவைகள் வைத்துப் பூஜித்து வழக்கம்போலவே சமையல்செய்து, காகத்திற்கு அன்னமிட்டுத் தன் கணவன் சாப்பிட்டபின் தானும் உண்டு, பின் வீட்டை மறுபடியும் நன்கு சுத்தம் செய்து, பாத்திரங்களை யெல்லாம் நன்கு விளக்கி ஒழுங்காக வைத்துவிட்டு, வீட்டில் எங்கும் அழுக்குத் துணி எதுவுமில்லாதவாறு பார்த்துவிட்டுப் பின் திருவிளக்கிற்கு உரிய பூஜையெல்லாம் செய்தாள். (இவ்விதம் அரசன் கட்டளைக்கு மாறுகக் குடியானவன் மனைவி செய்ததைக் கண்ட அரசன் சேவகர்கள் அரசனுடைய அன்பிற்கும் பாத்திரமான குடியானவனைப்பற்றி எதுவும் விசாரிக்கப்பயந்து கண்டும் காணதவர்கள்போல் தலையை மறைத்துக்கொண்டனர். அரசாங்க சேவகர்களே இப்படி என்றல் சாதாரண குடிமக்களைப்பற்றிக் கேட்கவும்வேண்டுமா? அவர்கள் அந்தக் குடியானவனைப்பற்றி யாதொரு புகாரும் சொல்லப்பயந்து அதைப்பற்றி யாதொன்றும்சொல்லாது சும்மாயிருந்துவிட்டனர்.)"எவ்விதஜீவன்களையும் அற்பிருந்த அந்த நாட்டைப் பார்க்கச் சகிக்காதவன்போலப் பகலவனும் அஸ்தமனகிரியை விரைவிலடைந்தான். குடியானவன் மனைவி தன் கணவனை அழைத்து அவனைப் பின்புற வாசலில் ஒரு தடியைக் கையில் வைத்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்திருக்கவேண்டு மென்றும், வீட்டிலிருந்து புறவாசல் வழியாக ஒரு ஸ்திரீ வெளியே போக யத்தனிப்பாளென்றும், அப்பொழுது வழியை மறித்து அவள் திரும்பவிட் தங்கள் வீட்டிற்குள் வரக்கூடாது என்று அதட்டும்படியும், அந்த ஸ்திரீ தான் இனி வருவதில்லை என்று உறுதிமொழி கூறினபின்புதான் அவளை வெளியேற விட வேண்டுமென்றும் சொன்னாள். குடியானவன் இப்பொழுதும் தன் மனைவியின் சொல்லைக் கட்டளைபோல் ஏற்று அப்படியே தன்கையில் தடியொன்றேந்தி புறக்கடை வாசற்படியில் உட்கார்ந்து கொண்டான். அவன் புறவாசலில் இவ்வாறு உட்கார்க்திருக்க அவள் தலைவாசலில் யாரோ ஒரு நல் விருந்தை எதிர்பார்த்திருப்பதுபோலக் காத்திருந்தாள்.

"நன்கு இருட்டிவிட்டது. எங்கும் விளக்கு வெளிச்சமே யில்லாததால் நாடெங்கும் இருளே மூடியிருந்தது. அப்பொழுது முகப் பொலிவுடனும் மங்களகரமான தோற்றத்துடனும் கூடிய இலக்ஷ்மிதேவி குடியானவன் வீட்டுவாசலை அணுகினாள். குடியானவன் மனைவி, தான் எதிர்பார்த்த நல்விருந்து வந்துவிட்டதைக் கண்டு உளக்கிளர்ச்சியுடனும் முகமலர்ச்சியுடனும் சட்டென எழுந்து இலக்ஷ்மியை வரவேற்க நின்றாள். வருங்கிவந்த இலக்ஷ்மியின் முகம் சிறிது கலைப்பைத் தெரிவித்தது. தனக்கு இருப்பிடம் தேடி நாடெங்கும் சுற்றி அலைந்து திரிந்ததனால் அவள் களைத்துப்போனாள். கடைசியாக அந்நாடு முழுவதிலும் குடியானவன் வீடுமட்டும் சுத்தமாயும், திருவிளக்கேற்றி அதற்குரிய பூசனையும் செய்து வைக்கப்பட்டிருந்ததாலும், குடியானவன் மனைவிமட்டும் அகம் புறம் இவ்விரண்டு விதத்தாலும் சுத்தமாயிருந்து உற்சாகத்துடனும் உளமகிழ்ச்சியுடனும் இருந்ததாலும், அந்த வீட்டிலேயே அன்றிரவைக் கழிக்கும் எண்ணத்துடன் இலக்ஷ்மி குடியானவன் வீட்டுவாசலை நண்ணினாள்.

"அப்போது புறக்கடை வழியாகக் கண்டவுடனே இவள்தான் மூதேவி என்று நிச்சயம்பண்ணக்கூடிய தோற்றத்தையுமுடையவளாய் ஒரு ஸ்திரீ தலைவிரிகோலமாக வீட்டைவிட்டு வெளியேற யத்தனித்தாள். அவளைக் கண்டதும் குடியானவன், வாயில் வழியை மறித்து அவள் தன் வீட்டிற்குத் திரும்பவும் எப்பொழுதும் வருவதில்லை என்ற வாக்குறுதி கொடுத்தாலொழிய அவளுக்கு வழி விடப்போவதில்லை என்று உறுதியுடன் சொன்னான். அந்த ஸ்திரீயானவள் குடியானவன் இவ்வாறான வாக்குறுதியைத் தன்னிடம் கேட்பானென்று எதிர்பார்க்கவில்லை. அவ் வாக்குறுதியைத் தர அவள் சற்றுத் தயங்கியது உண்மைதான். ஆயினும் அந்த வீட்டினுட் குடி புகுவதற்காக வந்த இலக்ஷ்மி அவ்வீட்டு வாசலை நெருங்கிவிட்டதால் 'எப்பொழுது வெளியேறுவோம்' என்ற எண்ணத்துடனும், பொறுக்கமுடியாத பரபரப்புடனும், உடல் நடுக்கத்துடனுமிருந்த அந்த மூதேவி 'நான் உன் வீட்டிற்கு எப்போதும் வருவதில்லை' என்று வாக்குறுதி செய்துவிட்டு, 'தப்பினேம் பிழைத்தோம்' என்று ஓடி இருளில் மறைந்தாள். இலக்ஷ்மி வரும் வீட்டில் மூதேவிக்கு இடமேது!

"வாசற்படியை நெருங்கிய இலக்ஷ்மியை நோக்கிக் குடியானவன் மனைவி, 'நீ இன்று வருவாய், நாளை போய்விடுவாய். நிலைத்து நிரிடத்தில் இருப்பதென்பது உனது இயற்கைக்கு விரோதம். ஆறிடு மேடும் மடுவும்போல்வது உனது இயற்கை. சக்கரம்போல் சுழன்று இடம்விட்டு இடம் மாறிக்கொண்டே யிருப்பாய். இப்படி ஒரு நிலையற்ற உனக்கு இங்கு, என்வீட்டில் இடந்தரமாட்டேன்' என்று சற்றுக் கடினமாகப் பேசுவதுபோல் நடித்து வினயமாகப் பேசினாள். இலக்ஷ்மி சொன்னாள்: 'தாயே! இன்று நான் நாடெல்லாம் தேடியும் நான் தங்குவதற்கு ஓர் இடமும் கிடைக்காமல் உன் வீட்டைநாடி வந்திருக்கிறேன். உன்வீடே நான் இருப்பதற்குத் தகுந்த இடம். நாடெங்கும் இருளால் மூடப்பட்டு அசுத்தமாயிருக்கிறது. அங்கு மூதேவி குடிகொண்டுவிட்டாள். உன் வீடுதான் எல்லாவிதங்களிலும் நான் தங்குவதற்கு யோக்யமானதாயிருக்கிறது. இன்று எனக்கு நீ இடங் கொடாவிட்டால் என் கதி என்னாகும்? தேடிவந்த இலக்ஷ்மியை ஒதுக்கித்தள்ளலாமா?' இவ்வாறு புலம்பிநின்ற இலக்ஷ்மிதேவியை நோக்கிக் குடியானவன் மனைவி 'இந்த வீட்டைவிட்டு என்றும்

விலகிப் போவதில்லை என்ற வாக்குறுதி ஒன்று தந்தால் என் வீட்டில் உனக்கு இடந்தருவேன்' என்றாள். வேறு புகலிடமில்லாத நெருக்கடியான நிலையிலிருந்த இலக்ஷ்மியும் அவள் கேட்ட வாக்குறுதியைத் தந்தாள். தந்து குடியானவன் குடிலில் குடிபுகுந்தாள். புகவும் விடெங்கும் ஒளிவீசுவதைக் கண்டு குடியானவன் மனைவியின் உடலபூரித்தது, உளம்குளிர்ந்தது, முகமலர்ந்தது.

"அன்று முதல் என்றும் இன்றும் அப்பேர்ப்பட்ட குடியானவன் வீட்டில் இலக்ஷ்மி வாசஞ்செய்து வருகிறாள். இலக்ஷ்மி குடிபுகுந்த இடத்தில் மங்களத்திற்கு என்ன குறை!"

இந்தக் கதையை எனது அன்னை பசுமரத்தாணி போலப் பதியும்படியும், உள்ளக்கிழியில் உருவெழுதினாற்போலவும் சொல்லிப் புத்தி புகட்டினாள். இக்கதையின் பொருள் முழுவதையும் இப்போது, சுமார் ஐம்பதாண்டுகள் சென்றபின், மஹா பாரதத்தைப் படிக்கும் போதுதான் நன்கு உணருகிறேன். மஹா பாரதத்தில் இலக்ஷ்மி ருக்மணியிடம் தான் எங்கெங்கு இருப்பாள், எங்கெங்கு இராள் என்பதை அவளே சொல்லுவதிற் சிலவற்றைத் தருகிறேன்.

"அழகுந் தைரியமும் வேலைத் திறமையும் உள்ளவனும், வேலை செய்துகொண்டிருப்பவனும், கோபமில்லாதவனும், தெய்வபக்தியுள்ளவனும், நன்றி மறவாதவனும், ஐம்புலன்களையும் அடக்கினவனும், ஸத்வகுணம் எப்போதும் தலையெடுத்தவனுமாகிய மனிதனிடம் நான் நித்யமாக வசிக்கிறேன்....மனத்தில் மேன்மேல் பயனைக்கருதாதவர்களும், இயற்கையிலேயே மனச்சோர்வை அடைந்தவர்களும், அற்பத்தில் திருப்தியடையும் தன்மையு முள்ளவர்களுமாகிய மனிதர்களிடம் நான் ஒருகாலும் நன்றாயிருப்பதில்லை..... காலத்தைச் சிறிதும் வீணாக்காதவரும் தானத்திலும் சுத்தத்திலும் ஊக்கமுள்ளவரும், ...தியானம் செய்வதையும் தத்வக்ஞானத்தையும் விரும்புகிறவரும் பசுவினிடத்திலும் அந்தணர்களிடத்திலும் பக்ஷமுள்ளவருமான மஹாத்மாக்களிடத்திலும் எப்போதும் வசிக்கிறேன்..... அடக்கத்துடன் பெரியோர்கட்குப் பணிவிடை செய்வதில் ஊக்கமுள்ளவரும், பொறுமையும் சாமர்த்தியமுமுள்ளவரான புருஷர்களிடத்திலும், பொறுமையும் அடக்கமும் சத்தியமும் நல்ல இயற்கையும், மனவாக்கு காயங்களில் ஒற்றுமையுமுள்ளவர்களும், தேவர்களையும் அந்தணர்களையும், பூஜிப்பவர்களுமான பெண்களிடத்திலும் வசிக்கிறேன், பண்டங்களைக் காப்பாற்றாதவளும், ஆராய்ந்து செய்யாதவளாய் எப்பொழுதும் கணவனுக்கு விரோதமாகப் பேசுகிறவளும், பிறர் வீட்டில் நோக்கமுள்ளவளும், நாணமற்றவளுமான பெண்ணை விட்டுவிடுகிறேன். ஆசையுள்ளவளும், காரியத்தில் திறமை யில்லாதவளும், கர்வமுள்ளவளும், சுத்தமில்லாதவளும், கலகத்தில் மனமுள்ளவளும், தூக்கம் அதிகரிப்பவளும், எப்போதும் படுத்திருப்பவளுமான ஸ்திரீயை விட்டுவிடுகிறேன். எப்போதும் உண்மை யுள்ளவர்களும், அழகும் குணங்களும் உள்ளவர்களும், கற்புள்ளவர்களும், மங்களாசாரங்களுள்ளவர்களும், அலங்காரங்களுள்ளவர்களுமான மங்கையர்களிடம் வசிக்கிறேன்..... எந்த வீடுகளிலுள்ள ஜனங்கள் காலத்தில் அக்னிஹோத்ரம் செய்து கொண்டும், பசுக்களையும் அந்தணர்களையும் பூஜித்துக் கொண்டும், புஷ்பங்களினால் அர்ச்சினை செய்துகொண்டு மிருக்கின்றனரோ அந்தவீடுகளில் நித்யவாசம் செய்வேன்.....எவனிடத்தில் என் கருத்தினால் இருக்கிறேனோ அவன் புண்யம், புகழ், பொருள், இன்பம் எல்லாவற்றிலும் மேலாகிறான்." —என்று நம் பாரத நாட்டில் இலக்ஷ்மி நித்யவாசம் செய்வாளோ!

விண்ணப்பப் பத்திரம்

திகதி.....

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணா; மலாயா 16 காசு.]

பெயர்.....

பிறந்த திகதி.....மாதம்.....வருடம்.....

விலாசம்.....

.....

பெற்றார், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் .....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு : இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீர அருள், தென்றல்வந்து வீசுவெளி சேருநாள் எந்நாளோ.

புருஷ லட்சணம்

[இணுவில் ' அம்பிகைபாக ' வித்தியாசாலையில் சென்ற திங்கட்கிழமை (3-7-39) நடந்த பெற்றார் தினக் கொண்டாட்டப் பெருவிழாவில்; உடுவில், R. K. சண்முகம் (223) S. S. C மாணவன் செய்த உபந்நியாசம்.]

உன்னத கல்வியும், உயரியநோக்கமும், மன்னிய அன்பும் மருவிய சபாநாயகரவர்கட்கும், அறிவும், ஆசாரமும், மறுவிலா ஒழுக்கமும் அமைந்த சபையோர்க்கும் எனது மனமார்ந்த வணக்கத்தைச் செலுத்துகின்றேன். பெரியோர்களே! உலகிலுள்ள எந்தப் பாஷையை நோக்கினாலும், எந்த இலக்கியத்தை நோக்கினாலும், எவ்வகைப்பட்ட பொருளை நோக்கினாலும் அவைகள் ஒவ்வோர் லட்சணத்துடனேயே அமைந்திருக்கின்றன. அவைபோலவே புருஷர்களுக்கும் அதாவது ஆடவர்கட்கும் போதிய லட்சணங்கள் பெரியோர்களால் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன.

" நாற்குணமும், நாற்படையாய்....." என்று பெண்களுக்கு லட்சணங் கூறிய புகழேந்தியார் பிறிதோரிடத்தில் " செம்மனத்தான், தண்ணளியான் செங்கோலான், மங்கையர்கள் தம்மனத்தை வாட்டுந் தடந்தோளான் " என்று புருஷலட்சணமும் கூறிச் செல்கின்றார். ஒரு வீட்டிற்குப் பலவகையான சிறந்த பொருட்களை வைத்தாலும் அல்லது அவ்வீட்டை வாசனை வீசும் பலவகையான பூஞ்செடிகளால் அலங்கரித்தாலும், சிறு குழந்தைகளிருந்து ஆடியும், பாடியும் அலங்கரிப்பதற்கு ஒரு சிறிதும் நிகராகமாட்டாது. அதிலும் ஆண் குழந்தைக்கு இருக்கும் மதிப்புக் கூற முடியாதென்பதற்கு குழந்தைபிறந்த அன்று நடக்கும் ஒரு சம்பவந்தான் சிறந்த அத்தாட்சியாகும். அது என்ன என்பது அநேகருக்குத் தெரியும். ஆனால் என்போன்ற சில, வயசுகுறைந்தவர்கட்குத் தெரியாமலிருக்கலாம். அதுஎன்ன தெரியுமா? அதுதான் " கூரைதட்டுதல்". தற்போது அந்த வழக்கம் மிகக் குறைந்துவிட்டது. ஆஸ்பத்திரிகள் அதிகப்பட்டமையே காரணமாகும். " ஓட்டுக்கூரை எட்டவும் மாட்டாது. எட்டினாலுந் தட்டவும் முடியாது. சபையோர்களே! ஓர் ஆண்குழந்தை பிறந்தவுடன் தகப்பனுடைய முகத்தை ஓர் புன்முறுவல் அலங்கரிக்கும். கற்கண்டு, கற்கண்டு என்னும் ஒலி அவர்செல்லுமிடங்களில் ஒலித்துக்கொண்டே நிற்கும். ஆனால் பெண் குழந்தை யென்றாலோ இவ்வளவு ஆரவாரங்கள் காணப்படமாட்டா. ஆனால் யான் பெண்குழந்தைகளைக் குறைவாக எடுத்துச் சொல்லவில்லை. அவர்களில்லாவிட்டால உலகில் ஒன்றுமே நடக்காது. ஆண்குழந்தை பிறந்தவுடன் ஆரவாரம் அப்படி. பிறக்கும்போதே ஆண்மையுடன் பிறந்த அவ்வாண் குழந்தை காலகதியில் ஓர் பெரிய மனுஷனாகின்றான். லட்சணமுள்ள புருஷத்துவத்தை யடைகின்றான். ஆண் குழந்தையின் பருவங்களைப்பற்றி ஓர் பெரியார், பையனாகி, அவனாகி, அவராகி அவர்களாகி, துரையாகி, பிரபுவாகி, மகாபிரபுவாகி, சக்கரவர்த்தியாகி என மிக அழகாகக் கூறி முடிக்கின்றார். ஓடியும், நடந்தும் பாடசாலைசென்று படிக்கும் பருவமுள்ள குழந்தையைப் பையனென்கின்றோம். ஆண்மையரும்பி, கல்வியில் முன்னேறி சுறுசுறுப்புடன் உலாவுகின்றவனை அவனென்கின்றோம். உலக நடையும், யௌவன தோற்றமும், உத்தம உழைப்பும், இன்னுஞ்சில உடையவரை அவர் என்கின்றோம். கல்வி கற்றுப் பெரியராகி பலப்பல பட்டங்கள் பெற்றவரை அவர்களென்கின்றோம். இங்ஙனமே அவ்வாண்குழந்தை ஒவ்வோர் பருவத்தை யடைந்தவுடன் ஒவ்வோர் பெயராலழைக்கின்றோம்.

சபையோர்களே! அறுசுவையோடுங்கூடிய சிறந்த போசனத்தையே யாவரும் விரும்புவர். அதுவே சிறந்த பலனை அளிக்கின்றது. அதுபோல சிறந்த கல்வியும், சீரிய ஒழுக்கமும், அறத்தினின்றும் வழுவாத முயற்சியும், சமயோசித புத்தியும் சாதுரியமும், உடல்வலியும், உற்சாகமும், வீரியமும் அமைந்த ஆடவர்களே உலகம். அவர்களே வருங்கால உலகிற்கு அநேக நன்மைகளையும் செய்யத்தக்கவர்கள். முற்காலத்தில் அநேக புருஷர்கள் இந்த லட்சணங்களுடனேயே சீவித்து வந்தார்கள். இக்காலத்தில் அப்படிப்பட்ட ஆடவர்களில்லையோவெனில், இக்காலத்திலுமுண்டு. ஆனால் மிகக்குறைவென்றே கூறலாம். முற்காலத்துள்ளோர் பெரும்பாலும் தம் மறிவின் பெருக்கத்தை நோக்கியே கல்வி கற்றனர். அவர்கள் தங்கள கல்வியைப் பொருளீட்டும் ஓர் ஆயுதமாகக் கருதவில்லை. சீவனார்த்தத்தின் பொருட்டு எவ்வகையான முயற்சியையுங் கைக்கொண்டிருந்தனர். சாத்தனார் என்னும் மாபெரும்புலவர் தானிய வியாபாரத்தையே கைக்கொண்டிருந்தனர். இதனால் அவர் பெயர் " கூலவாணிகன் " சாத்தனார் என்றாயிற்று. " செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப்பார்த்தாலும், நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை" என்று நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் நெசவுத் தொழிலையே கைக் கொண்டிருந்தார்கள். கல்வியால் பொருள் சம்பாதித்தவர்களும் இருந்தார்கள்.

இக்காலத்துக் கொள்கை அப்படியல்ல படித்தால் உத்தியோகம் பார்க்கவேண்டுமாம். அல்லது படியாமல் மூடத்தன்மையுடனேயே இருந்துவிடவேண்டுமாம். எவ்வகைப்பட்ட முயற்சியும் புருஷர்களுக்குச் சொந்தமானது. எவ்வகைப்பட்டமுயற்சிக்கும் அறிவுவிருத்தி மிகவும் பிரதானமானது. அறிவுவிருத்திக்குக் கல்வியே ஆதாரமென்பதை இக்கால வாலிபர் மறந்து விட்டனர். நெருப்புத் தணலை இரத்தினக் கல்லென மதிதது மடியிற் கட்டுவது போல, இக்காலத்துள்ள சில ஆடவர்கள், மேல்நாட்டு நாகரிக மொன்றைக் கைக்கொண்டதன் பெறு பேறாக எங்கள் முன்னோர் உண்டுவந்த சிறந்த உணவுகளைப் புறக்கணித்தனர். ' ரின்பால்' ' ஓவல்ற்றின்' சாரமற்றவிஸ்கோ

(தொடர்ச்சி 288-ம் பக்கம் பார்க்க).

பாட்டி விட்டுப் பலகாரம்

விச்சு ஒரு விஷமக்காரப் பையன். கிட்டவும் சேர்ந்தால் இன்னும் விஷமம் அதிகரிக்கும்.

ஒரு நாள் காலை விச்சு "கிட்டு கிட்டு வாறியாடா பாட்டி வீட்டை" சென்ற பல்லவியுடன் வந்தான். ஆனால் கிட்டு படுக்கையால் எழவில்லை. பார்த்தான் விச்சு; பக்கத்திலிருந்த தண்ணீர் வாளியைக் கிட்டுமீது சரித்து விட்டான். கிட்டு சுர்என்று எழுந்தான். "என்னடா விடிந்தது தெரியாயா? வாறியா பாட்டி வீட்டை" என்றான் விச்சு. பாட்டி வீடென்றதும் கிட்டுவுக்கு வந்த கோபமும் பறந்துபோய்விட்டது. சரி என்று இருவரும் அடுத்த வீட்டுப் பாட்டியிடம் போனார்கள்.

பாட்டி பலகாரம் சுட்டுக் கொண்டிருந்தாள். இருவரும் அடுப்பண்டை சென்று நெருப்பெரிக்கத் தொடங்கி விட்டனர். பாட்டி அவர்களுக்குப் பிய்த்த பனியாரங்களைக் கொடுத்தாள். பாட்டி சுட்ட பனியாரங்கள் பலகாரத் தட்டின் கீழ் இருந்தது. இதன் மீதுதான் கிட்டுவுக்குக் கண்.

பாட்டிக்குக் கண் புகைச்ச லென்பது இவர்களுக்குத் தெரியும். விச்சு நெருப்பை எரிப்பதற்குப் பதிலாக ஊதித் தணித்து விடுவான். "பாட்டி பாட்டி பச்சை விற காய் இருக்கிறது எரிகிறதில்லையே" என்பான். பாட்டி தலை குனிந்து நெருப்பை ஊதுவாள். இதுதான் சமய மென்று கிட்டு பலகாரப் பெட்டியில் கையை வைப்பான். இப்படியே பலகாரத்தில் சிலவற்றைக் கிட்டு எடுத்து விட்டான். சிறிது நேரத்தில் இருவரும் வெளியேவந்தனர்.

இருவருக்கும் பலகாரத்தைப் பகிர்வதில் பலத்த சண்டை உண்டாயது. பலகாரமும் இவர்கள் அதிஷ்டத்தாலோ ஏன்னவோ பதினொன்றிருந்தது. இதை எவ்விதம் பகிர்வது. கிட்டு தான் எடுத்தபடியால் தனக்குக் கூடத் தரவேண்டு மென்கிறான். விச்சு நான் உன்னை அழைத்து வந்ததற்காகவே எனக்கு இத்தனை என்கிறான். கடைசியில் ஒரு உபாயம் செய்தனர். பூக்குத்திருந்த வீட்டைச் சுற்றி யார் முதலில் வருகிறார்களோ அவர்களுக்கே கூடிய ஒன்றையும் கொடுக்க வேண்டுமென தீர்மானித்தனர். இருவரும் பலகாரத்தை வைத்துவிட்டு வீட்டைச் சுற்றி ஓட ஆரம்பித்தனர்.

இருவரும் ஒரே நேரத்தில் சுற்றி வந்தனர். ஆனால் பலகாரம் ஒன்றையும் காணவில்லை. பார்த்தான் கிட்டு; பாட்டி வீட்டு நாய் பலகாரத்தைக் கொண்டோடுவதை. தம் துர்அதிஷ்டத்தை எண்ணி நொந்து கொண்டனர். விச்சுவும் தனது விஷமத்தைக் குறைத்துக் கொண்டான்.

265. க. சுப்பிரமணியம்
தென்மயிலை

"நாஸ்திக வீரன் ஆஸ்திக்னன்!"

கடவுள் ஒருவர் உண்டென்று நம்புகிறவர்களுக்கு ஆஸ்திகர் என்று பெயர். கடவுள் இல்லை என்று மறுக்கிறவர்களுக்கு நாஸ்திகர் என்று பெயர். ஓர் நாஸ்திகர் ஆஸ்திகனாக மாறுவ தென்றால் சாதாரணமான காரியம்.

வீரன் ஓர் ஏழைக் குடியானவன். அவன் கடவுள் இல்லை என்று மறுக்கும் நாஸ்திகன். தெய்வம் என்று அவனிடம் சொன்னால் சிறி விழுவான். கடவுள் என்று சொல்லுவோரைக் காய்ந்து விழுவான். ஆலயங்களைக் கண்டால அசட்டை செய்வான். அடியாரைக் கண்டால் அவமதித்துப் பேசுவான். யாராவது வீரனிடம் கடவுளைப் பற்றிப் பேசினால், "கடவுளை நீ கேரில் கண்டாயா? அவர் எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்? என்ன செய்கிறார்?" என்று குதர்க்கமாய் கேட்டு, கேட்டவர் வாய்க்குப் பூட்டு போடுவான்.

வீரன் ஒரு நாள் ஓர் ஊருக்குப் பிரயாணம் செய்தான். வழியில் ஒரு குளக்கரையிற் தங்கி, கட்டுச் சாதம் சாப்பிட்டு களைதீர ஓர் ஆலமரத்தடியிற் படுத்தான். மேலே பார்த்தான். மரத்திற் பழங்கள் நிறைந்திருக்கக்கண்டு, தனக்குள் யோசிக்க ஆரம்பித்தான்.

"ஆஹா, இந்த ஆலமரம் எவ்வளவு பெரியதாய் ஓங்கி வளர்ந்திருக்கிறது! இது சுமார் கால் மைல் அளவுக்குப் பரந்திருக்கும் போல் காணுகிறது. சில இடங்களில் ஆலமரம் ஒருமைல் அளவுக்கும் பரந்து வளர்ந்திருக்கிறது. இவ்வளவு பெரிய மரத்திற்குக் காயோ கழற்சிக் காய் அளவாய்ச் சிறுத்திருக்கிறது. பூசணிக் கொடியோ ஒரு விரலளவு பருமனிக்கும். அதன்காயோ பலாக்காயிலும் பருத்திருக்கிறது; இது என்ன ஆச்சரியம்!"

"சிலர் இவற்றை யெல்லாம் கடவுள் ஒருவர் படைத்ததாகச் சொல்லுகிறார்களே, அந்தக் கடவுளின் அறிவை என்ன வென்று சொல்லலாம்! பெரிய மரத்திற்குச் சிறிய காயும், சிறிய கொடிக்குப் பெரிய காயும் படைத்தது மூடத்தனமல்லவா" என்று எண்ணினான்.

அப்பொழுது ஓர் ஆலங்காய் மரத்திலிருந்து அவன் புருவத்தில் விழுந்தது. எழுந்து, "ஆஹா! நமக்கு நல்ல புத்தி வந்தது. கடவுளை மூடன் என்று எண்ணினோமே, அவர் மூடரல்லர். அவர் மிகவும் அறிவுடையவர். அவர் இந்த மரத்திற்கு ஏற்றது போல் பெரிய காயை உண்டாக்கியிருந்தால், இப்பொழுது நமது தலை நொறுங்கிப் போய் இருக்குமல்லவா? அவர் அறிவே அறிவு. அவருடைய மகிமை தெரியாமல் இது வரையில் வாய்க்கு வந்தபடி பிதற்றிக்கொண்டு இருந்தோமே, என்ன செய்வது. இனியாவது நாம் கடவுளை வழிபடவேண்டும்; என்று தீர்மானித்து, நற்புத்தி அடைந்தான்.

சி. அரசரத்தினம் (180)
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை

சாலக் கபாடத் தடைநீர எம்பெருமான், ஓலக்க மண்டபத்துள் ஓடுநாள் எங்காளோ.

என்னைத் தொட வந்தாள்

சாய்ந்தேன் சோபாவின் மேல். அன்று எனக்குப் பாடசாலை லீவு நாளாகும். வீட்டிற் சும்மா இருப்பதென்றால், என்னமோ பைத்தியம் பிடித்தவர்போற் காணப்படும். கையில் ஆயுதமில்லாத நாளே கிடையாது. ஒரு நேரமும் வாளாவிரேன். கழிந்த நாட்களெல்லாம் பொன்போல் மதித்திருப்பேன். சோபாவிற் சாயும் போது கல்வி அநுபந்தமும் கையிலிருந்தது. சில விஷயங்களை வாசித்தும் விட்டேன்.

எட்டியது கண்ணுக்குச் 'சுதந்திரம்'. மனம் ஒருப்பட்டு வாசித்தேன். கண்கள் விஷயத்தில் லயித்துப் போயிருந்தன. அந்தச் சந்தர்ப்ப நேரத்திற்றானே— ஒரு பெண்மணி தொட வந்தாள். நித்திராதேவி அல்லது நித்திரைக்கரசி அவள்தான். அவள் வந்ததின் விம்பம் தோற்றின கண்கள் இரண்டிலும். என்னை மெல்லெனத் தொடவந்தாள். தன் காந்தள் விரல்களாற் கண்களை மூடுவதும் திறப்பதுமாக விருந்தாளவள். விளையாடுகிறாள் போலும் என்று நினைத்தேன். அவ் விளையாட்டுச் சேஷ்டையாய் முடிந்தது. தொடவேண்டாம் என்று பல முறை வற்புறுத்தியும் கேட்காது, அப்பெண்மணி சரசஞ் செய்தாள் என்னுடன்.

அடிக்கடி கண்களை மூடவே, அவள் கைகளைத் தடுத்து. வாசிப்பதிலே இருந்தேன். உற்றுப் பார்த்ததிற் கண்கள் பூர்த்துவிட்டன. அவளுடன் போராடியதில் மனம் சலிப்படைந்தது. தருணம் வாய்த்துவிட்டதவளுக்கு. துரத்தலாமென்று முயன்றும், அவள் அகலமாட்டாளாம். என்னையே தொந்தரவு செய்கிறாள். மனம் பலமுறை வாதாடிக் களைத்துவிட, வாய்த்துவிட்டதவளுக்குச் சுதந்திரம். அவள் தன்னுடைய மந்திர சக்தி முழுவதையும் பாய்ச்சிவிட்டாள். மனம் அவள் வசப்பட்டது. நித்திரைத்தாகம் உடனே என்னை வருத்தத் தொடங்கியது. அப்பெண்ணின் மன எண்ணம் பூர்த்தியாகிவிட்டது. ஒரு வகையாகப் பத்திரிகையை வாசித்து முடிக்கலாம் என்று முயன்றும் முடியவில்லை. கண்களில் நித்திரை நிரம்பித் தழும்பிக்கொண்டு நிற்கின்றது.

"வீரசுதந்திரம் வேண்டி நின்றார்—பின்பு
வேறொன்றும் வேண்டாரே.

என்ற பாரதியார் கூற்றை யிசையுடன் படிக்கவே யவளும், தண்மை பொருந்திய மலர்க்கரங்களாற் கண்களையிறுகத் தழுவினாள். பாரதியார் கூற்று நித்திரைக்குத் தாலாட்டாகி விட்டது. அம்மங்கை தன்னிருகரங்களாற் பரிசிக்க என்மனம் கூச்சமடைந்து கண்கள் மூடப்பட்டன. நித்திரா தேவியோ! பொல்லாதவள். கர்வமுடையவள்; கூச்சமில்லாது எவரையுந் தொடுபவள்; தன் எண்ணத்தையே நிறைவேற்றித்தீர்வாள். அன்றே யறிந்தேனவள் குணம்.

மாய நித்திரையில் மூழ்கினேன். பத்திரிகையின் நிலைபரம் என்னமோ தெரியாது. தன்னுடன் இவ்வளவு தூரம் வாதாடியதற்காகப் போலும் கோபித்துவிட்டாள். ஏறக்குறைய மூன்று மணித்தியாலம் கண் அடக்கத்திற் கிடந்துவிட்டது. செய்யுந்தொழி லின்னதென்பது தெரியாது. நித்திரைக் காலத்தில் ஆன்மா மாத்திரம் தன் தொழிலைச் செய்ய, மற்றைய உறுப்புக்கள் – அடக்கத்திற் கிடந்து, தம் தொழில்களைச் செய்ய ஆழ்ந்த நித்திரையிற் பல, பல தீக் கனவுகளைக் கண்டேன். பயமுண்டாயிற்று. வெருட்டுகின்றாள் என்னையவள். அப்போது பரிதாபமான கதியாகும். பாதகதேவியைப் பார்த்து இவ்வளவு தூரம் பயப்படுத்தலாமா? என்று கெஞ்சி மன்றாடினேன். அதற்குமவள் கேட்டபாடில்லை. இவ்விதமாக நெடிது நேரஞ் சயனமாகிவிட்டேன். இதைப்போன்ற 'கும்பகர்ணநித்திரை, ஒருகாலமும் கொண்டதில்லை. கும்பகர்ணன் கூடக் கொள்ளமாட்டான் இந்த நித்திரை: இதுதான் மரண நித்திரை. சொல்ல மறந்துவிட்டேன். தாத்தா பாட்டியைக் கூடக் கனவுலகத்திற் கண்டேன்.

இன்னுஞ் சற்று இரக்கமில்லையவள் நித்திராதேவிக்கு. வீட்டார் பாடும் என்னமோ தெரியாது? நித்திரை யுலகத்திற்றான் உலாவிக்கொண்டு நிற்கின்றேன். விழிப்புலகத்துக்கு வரவே முடியாது. என்ன! இன்னும் பக்கத்தில் இருந்து, விழிக்கும்போதெல்லாம், மறுபடியும் கரங்களால் மூடுகிறாள். அவள் வருடியதாற்றானாகவே நித்திரை வந்தது.

இவ்வளவு தூரம் நித்திரை செய்பவனின் கெதி என்னவாகும்? நீங்களும் நித்திரை யுலகத்துக்குப் போவீர்களா? வீட்டார் பாடும் என்னவாகும் என்று நினைக்கும்போது, விழுந்தது அம்மா, தட்டின தட்டு. என்ன விதமாக ஏசினா என்பது தெரியாது. கண்களை விழித்துப் பார்த்தேன். அப்பவே விடைதந்தாள் போலும். கண்கள் பிசினால் ஒட்டிவைத்தாற்போற் கிடந்தன. கண்ணைக் கசக்கிக்கொண்டு. சோபாவை விட்டிறங்கினேன். இதற்குள் கல்வி அனுபந்தமும் என் மார்பில், நித்திரை செய்துகொண்டிருக்கிறது. அதையும் தட்டி எழுப்பி விட்டேன். பலவாறாக அம்மா ஏசினா, ஆத்திரம் வந்தது. ஒரு புறம் அடக்கினேன். இவ்வளவு தூரமாக நித்திரை செய்தது, அம்மாவுக்கோர் மனப்பயம் இருந்திருக்க வேண்டும். பெற்றமனம் அல்லவா?

என் சரீரம் மெலிவுற்றிருந்தது; முகம்வாடி வரண்டிருந்தது; கண்கள் சிவந்து, குடிகாரன்போற் காணப்பட்டன. தேகமுழுவதும் அலுப்பும் சோம்பலும் அடைந்திருந்தது. இரத்தம் கெட்டுப்போகும். உறுப்புகள் வேலைசெய்யா. சரீரசுகமடையாது. முகம் துக்கமாகக் காணப்படும். பகல் நித்திரை கொள்வதால் மூதேவியடைவாள். அசௌக்கிய முண்டாம். வீரசுதந்தரத்தை மறுநாளுமே காட்டவந்தாளப்பெண். அதற்கு உரப்பித் தள்ளிவிட்டேன். இவ்வளவும் பகற்கால நித்திரையாற் கண்ட, கைமேற்பலன்களாகும். இராக்கால நித்திரை சரீரவளர்ச்சியும், சுகத்தையும் கொடுக்கும்.

விண்ணவன் தாளென்னும் விரிநிலா மண்டபத்தில், தண்ணீர் அருந்தித் தளர்வொழிவ தெந்நாளோ.

எங்கள் உணவு

யாழ்ப்பாணத்தவராகிய நாம் அரிசிச் சோற்றையே சாப்பிடுகிறோம். நமது ஆகாரத்தில் மிகப் பெரும் பகுதி அரிசியாலேயே ஆனது. நம் உடம்புச் சுகத்திற்கு வேண்டிய சீவசத்துப் பொருட்களடங்கிய காய் கறிகள், பழங்கள், தானியங்கள் ஆகிய தாவர பதார்த்தங்களை அதிகம் புசிக்க வேண்டும். எல்லாச் சீவசத்துப் பொருட்களும் ஒரு பதார்த்தத்தில் இருக்க மாட்டா. நாம் உடம்புச் சுகத்திற்கு அதிகமாகப் பச்சைக் காய் கறிகளையும் நன்றாகப் பழுத்த புதுப் பழங்களையும் சாப்பிட வேண்டும். தினமும் ஈரை, கிழங்கு வகைகளி லொன்றைக் கொஞ்சம் பச்சையாகச் சாப்பிடவேண்டும்.

அரிசி நமக்கு வேண்டிய போஷணையைத் தருகின்றது. அதிலிருந்து நாம் முக்கியமான சீவதாரப் பொருளையும் பெறுகின்றோம். இந்தச் சீவதாரப் பொருள் நமது தேகவளர்ச்சிக்கும் ஜீரணத்திற்கும் இன்றியமையாதது. அதற்குப் பீ சீவசத்து(வீற்றமின் B) என்று பெயர். நாம் அரிசியை இயற்கை அன்னை தருகிறபடியே சமைத்துச் சாப்பிட்டால், நமக்கு வேண்டிய அளவு பீ சீவசத்துக் கிடைக்கும். ஆனால் நாமதை அப்படிச் செய்வதில்லை. நாம் அரிசியைப் படாதபாடெல்லாம் படுத்தி அதிலுள்ள உயிர்ச் சத்தைக் களைந்துவிடுகிறோம்.

சிலர் தங்கள் உபயோகத்துக்கு வேண்டிய அரிசியை வீட்டிலேயே குத்திக் கொள்ளுகிறார்கள். வேறு சிலர் அதை யந்திரங்களிற் குத்திக் கொள்ளுகிறார்கள். அப்படி யந்திரங்களிற் குத்திய அரிசியைப் பார்க்க வெள்ளையாகவும் மினுக்காகவும் இருக்கிறது. இன்னும் சிலர் வீட்டிலே நெல்லை அவித்து குத்துவதற்கு யந்திரங்களுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் பெரும்பாலோர் தங்கட்கு வேண்டிய அரிசியைக் கடையிலேயே வாங்கிக் கொள்ளுகிறார்கள்.

அரிசியிலே பீ சீவசத்து இருந்தாலும் அவ்வளவு அதிகம் இருக்கிறதென்று சொல்வதற்கில்லை. அது அரிசியின் வெளி யடுக்குகளிலிருக்கிறது. அரிசியை யந்திரத்திட்டுத் தீட்டுகையில், அதன் வெளி அடுக்குகள் சேதப்பட்டுப் போகின்றன. வெளி அடுக்குகள் சேதப் படும்பொழுது, அவற்றிலுள்ள பீ சீவசத்துப் பெரும் பகுதியும் சேதப்பட்டுப் போகின்றது.

நெல்லை அவிப்பதினால், அதன் வெளி அடுக்குகள் அரிசிமணியுடன் பலக்க ஒட்டிக்கொள்ளுகின்றன; அவற்றை இலேசிலே நீக்கமுடியாது. இவ்வாறு புழுங்கலரிசியிலே பீ சீவசத்துக் கெட்டாமலிருக்கின்றது என்ற வகையில் அது நல்லதுதான். ஆனால் நெல்லை அவித்தலால் அதிலுள்ள பீ சீவசத்து கெட்டுப்போகின்றது. புழுங்கலரிசி பார்க்க அழுக்காக இருக்கிறது; ஆகையால் அதைச் சமைக்குமுன்னரே பல தடவை கழுவ வேண்டியிருக்கிறது. பீ சீவசத்தோ, நீரிற்கரைந்து கெட்டுப்போகக்கூடியது. ஆகையாற் சமைக்குமுன் கழுவப்படும் அருசியிலுள்ள பீ சீவசத்தெல்லாம் நஷ்டமாய் விடுகின்றது.

அரிசியை உபயோகித்தற்குள்ள சிறந்தமுறை என்னவெனில், நெல்லை அவியாதபடி, வீட்டிலேயே குத்தி, எவ்வளவு குறைவாகக் கழுவமுடியுமோ அவ்வளவு குறைவாகக் கழுவி உபயோகித்தலேயாம். அரிசியை இவ்விதமாக உபயோகித்தாலும்கூட நமது தேகத்திற்கு வேண்டியளவு பீ சீவசத்துகிடைக்காது. ஆகையால் நாம் சாப்பிடும்போது சோற்றுடனே பருப்பு, நெய், காய் கறி முதலியவற்றைச்சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும். அப்படிச்செய்யாவிடின் நமக்குப் 'பெரிபெரி' என்ற நோயுண்டாகும். நெல்லை, இருட்டும் ஈரமுமான இடங்களிற் சேகரித்துவைத்திருந்தால் அது ஒருவேளை கெட்டுப்போய் பின்பு அதை வாங்கிச்சாப்பிடுகிறவர்களுக்குப் 'பெரிபெரி' என்ற நோயையுண்டாக்கலாம்.

தங்களுடைய சொந்தச் சாப்பாட்டிற்காக நெற்பயிர் செய்கிற ஒவ்வொருவரும் தோட்டத்தின் ஒரு பாகத்திலே தக்காளி, பயறுவகைகள், வேர்க்கடலை, கீரை, வெண்டி முதலியவற்றையும் பயிர்செய்யவேண்டும். இப்படிச் செய்தாற்றான் நமது தேகத்திற்கு வேண்டிய பீ சீவதாரப் பொருள் கிடைக்கும். அவற்றுடன் கொஞ்சம் பாலும் சேர்த்துக்கொண்டால் வீட்டிலுள்ள ஒவ்வொருவரும் பலமாயும் நல்லசுகமாயும் இருக்கமுடியும்.

வே. சின்னையா (சு. எ. 260)
உடுவில்தெற்கு, சைவவித்தியாசாலை.

மாணவர்களே! மனிதவுடலை எடுத்த நீங்கள் ஒரு காலமும் பகற்கால நித்திரை கொள்ளாதீர்கள்! கோயில் லாமற் சுகத்துடன் வாழத் தெண்டிக்கவேண்டும். பகல் நித்திரை நீங்களும் செய்வீராயின் பலனினமும், புத்தி மந்தமு மடைவீர்கள். இவள் தொடவந்த காலத்திற் துரத்திவிடுங்கள். இவள் எண்ணம் பலித்து விட்டால் தன்னெண்ணப்படி நடாத்துவாள். இவள் வசமானால் நீங்கள் அனேவரு மிக்கெடுதிகளுக்குள்ளாவீர்கள். பின், என்மேற் குறைகூறுதீர்கள். பகல் நித்திரை தூரவே தள்ளுங்கள். அப்பெண்ணுடன் சிநேகஞ் செய்து கொள்ளவேண்டாம். பகற்கால நித்திரை செய்யாதொழிவீர்களாக!

"பீ சுதந்திரம் வேண்டி நின்றார்—பின்பு
வேறொன்றும் வேண்டாரே.

இவ்விஷயத்தை மற்றும் சகோதர சகோதரிகட்குத் தெரிவிக்கலாமென்று என் மனந் தூண்டியதால் இதை எழுதலானேன்.

M. K. சின்னத்துரை (சு. எ. 263)
உடுவில் தெற்கு, சைவவித்தியாசாலை

புருஷ லட்சணம்

(284-ம் பக்கத் தொடர்ச்சி)

த்து; 'சிகறெற்' முதலியவற்றை உபயோகித்தத் தலைப் பட்டனர். இக்காலத்தில் வீபூதி, சந்தனம் அணியும் ஆடவர்களைக் காண்டல் அரிது. 'பவுடரால் முகப் பூச்சும், 'சென்ற்'தினால் ஸ்நானமும் பண்ணிக் கொள்ளுகின்றனர். இதனால் உடல்வலியையும், வனப்பையும், ஆண்மையையும் இழந்தனர். இவ்வாறு ஆடவருலகம் ஒளி மழுங்கியிருக்கின்ற காலத்தில் நாட்டின்நிலை மிகக் கேவலமடையஆரம்பிப்பது இயல்புதானே! ஆடவர்களின் சீர்கேட்டைக் கண்ணுற்ற பெண்மணிகள் விழிப்படைந்தனர். தங்களுக்கும் சமஉரிமை கொடுக்கவேண்டுமென்று வாதாடுகின்றனர். ஆண்கள் வகுத்த உத்தியோகங்கள் யாவும் தாங்கள் வகுக்கவேண்டுமாம். வீரத்தாய்மார் பிறந்த நாட்டிலுள்ள நாங்களும் வீரர்களாய் வந்து யுத்தஞ்செய்தாலென்ன? என்றெண்ணுகின்றனர். ஆடவர்களும் இவர்களின் கூற்றுக்கு இசையவேண்டியவர்கள்தானே! ஏன்? தங்களால் இயலாக் காரியத்தைப் பெண்களாகுதல் செய்யத்தானே வேண்டும். அன்பு மிக்க சகோதரர்களே! "சாண்பிள்ளை யென்றாலும், ஆண்பிள்ளை" என்றதை மறந்துவிடாதீர்கள்; "கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி" என்பதை நினைவு கூருங்கள். "வாளினும்பார்க்கப் பேனை வலியுடைத்து." எதிர்கால உலகம் உங்கள் கையிலேயே இருக்கிறது. "பணமில்லாதவன் பிணமன்றோ." கமத்தொழில், கைத்தொழில், வியாபாரம் என்பவற்றில் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும்; பதவிவேட்டையில் மாத்திரம் கண்வைத்திருத்தல் கூடாது. யாவரோடும் ஒற்றுமை வாழ்வு நடாத்த வேண்டும்; பிறர்க்குதவி செய்யும் பெற்றியராய் வாழ வேண்டும். உடல்வலியும், உளவலியும் அவசியம் இருக்கவேண்டும். உங்களைப் போலவே பெண்சமூகமும் அறிவு, ஆசாரம், கல்வி, ஒழுக்கம், உயர்வு என்பவற்றில் முன்னேற்றமடையச் செய்யுங்கள். உயர்ந்த அறிவாளிகளாயும், உன்னத தேசத் தொண்டர்களாயும் சதாபாவனை பண்ணவேண்டும். முற்காலத்திருந்த "சிவாபாய்" என்னும் வட இந்திய மாதரசிரோன்மணி "சிவாஜி" என்னும் வீர மன்னனைத் தமது மணிவயிற்றில் வைத்திருக்கும்போதே அவன் ஒரு வீரனென்றும், ஞானியென்றும், சக்கரவர்த்தியென்றும் பாவனைபண்ணிக்கொண்டிருந்தாள். அத்தகைய உயரிய நிலையைச் சிவாஜியும் அடைந்தானன்றோ? "சிவாஜி" புருஷ லட்சணங்கள் யாவும் பொருந்திய பூபதி. அஞ்சா நெஞ்சம் படைத்த அரியேறு. சிறு பாலியனாய் இருக்குங் காலத்தில் ஒருநாள் தாயுடன் 'சொக்கட்டான்' ஆடிக்கொண்டிருந்தான். அன்றைய ஆட்டத்தில் தாய் வெற்றியும், சிவாஜி தோல்வியும் அடைந்தான். இதனால் சிவாஜிக்கு வெட்கமும், துக்கமும் பொங்கியெழுந்தன. தாயின் முகத்தை நோக்கினான். தாயும் அவனை அன்புடன் நோக்கிச் சிரித்து, "மகனே! நீ, எனக்குத் தோற்றுவிட்டாய், இதற்காக எனக்கு எவற்றைத் தரப்போகின்றாய்" எனக் கேட்டாள். உடனே சிவாஜியும் "அம்மா! நீங்கள் எதைக் கேட்டாலும் தருதற்குச் சித்தமாயிருக்கிறேன்" என்று கம்பீரமாக விடையிறுத்தான். சிசாபாயும் தாமதியாமல், "அக்கோட்டையை எனக்குக் கொடுத்துவிடு" எனக் கூறினாள். "தங்கள் தலை இருக்கும்போது இது கடினமாமோ? தருகின்றேன்" எனப் பணிவுடன் மொழிந்தான். ஆனால் அக்கோட்டை பகைவருடையது. பகைவர்களோ இயம தூதுவர்க்குச் சமானமானவர்கள். அவர்களை ஜெயிப்பது இலகுவா? சிவாஜி தன் நண்பர்கள் சிலரைச் சேர்த்துக்கொண்டு யுத்தத்திற்குப் புறப்பட்டான். தாயின் கருத்தை நிறைவேற்ற எண்ணிய சிவாஜிக்கு யுத்தகளம் ஓர் திருமுபோற் காணப்பட்டது. இவனின் வீர முழக்கத்தைக் கேட்ட பகைவர் திடுக்கிட்டனர். சிவாஜியா விடுபவன்? பகைவரை வாளுக்கிரையாக்கிக் கோட்டையைக் கைப்பற்றினான். இப்படியே இவன் அஞ்சாமையிலும், ஈகையிலும், அறிவிலும், ஊக்கத்திலும் தலைசிறந்து விளங்கினான். இன்னும் எத்தனை பெரியோர்கள் எங்களுக்குச் சிறந்த வழிகளைக் காட்டியிருக்கின்றனர். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றினாற்றான் நாங்களும் கடைத்தேறுவோம்.

அன்புடைப் பெரியீர்! புருஷலட்சணம் என்னும் விடயம் அறிவாற்றலால் மேம்பட்ட கல்விமான்களே யன்றி என்போன்ற அறிவிற் குறைந்த சிறியோர்கள் விரித்துப் பேச இயலாதாகையால் என் சிற்றறிவுக்கெட்டியவரை கூறினேன். இவற்றில் வழுக்களிருப்பின் தயை கூர்ந்து மன்னிக்கும்படி வேண்டுகின்றேன்.

தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனப் பரீக்ஷா புத்தக சபையாரால் 3-3-36 ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சோல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளக்கக் கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரைநடைப் பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் உபயோகித்து வருகிறார்கள்.

விலை சதம் 50

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு "திருமகள்நிலைய"தில் இருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியில்' உள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஜூலாய்மீ 9உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.